சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – 2020–ஆம் ஆண்டுக்கான தமிழ்ச் செம்மல் விருதுகள் – விருதாளர்களைத் தெரிவு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(துவ 1.2)த் துறை

அரசாணை (நிலை) எண்.7

நாள் 08.01.2021
சார்வரி, மார்கழி – 24
திருவள்ளுவராண்டு – 2051

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.88, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(து.வ 1.2)த் துறை, நாள் 28.10.2020.

படிக்க:

2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.8886/தமிழ்3/2020, நாள் 28.12.2020.

******

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 2019–ஆம் ஆண்டுக்கான தமிழ்ச் செம்மல் விருதுகள் மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 37 விருதாளர்களுக்கு வழங்கி ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்ச் செம்மல் விருதுகள் 2015–ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருவதாகவும், இவ்விருதுகள் தமிழ்நாட்டில் தமிழ் வளர்ச்சிக்காக அரும்பாடுபடும் ஆர்வலர்களுக்கு அவர்களின் தமிழ்த் தொண்டினை பெருமைப்படுத்தி ஊக்கப்படுத்தும் வகையில் வழங்கப்படுவதாகவும், 2015 முதல் 2019 வரையிலான ஆண்டுகளுக்கான தமிழ்ச் செம்மல் விருதுகள் வழங்கப்பட்டுவிட்டதாகவும், தற்போது 2020–ஆம் ஆண்டிற்கான தமிழ்ச் செம்மல் விருதுகள் வழங்கப்பட வேண்டியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், 2020–ஆம் ஆண்டிற்கான தமிழ்ச்செம்மல் விருதுகள் வேண்டி விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன என்றும், ஒரு மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 38 மாவட்டத்திற்கும் 38 பேர் என்ற வகையில் தகுதியானவர்களை அரசு நிலையில் தெரிவு செய்து உரிய ஆணை வெளியிடப்பட ஆவன செய்திடுமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, 2020–ஆம் ஆண்டுக்கு தமிழ்ச் செம்மல் விருதுகள் மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள 38 விருதாளர்களுக்கு வழங்கலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

4. தமிழ்ச் செம்மல் விருது பெறும் விருதாளர் ஒவ்வொருவருக்கும் இருபத்தைந்தாயிரம் ரூபாய் விருதுத் தொகையுடன், தகுதியுரைச் சான்றிதழ் வழங்கியும், பொன்னாடை அணிவித்தும் சிறப்பிக்கப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை –8.
உரிய விருதாளர்கள், (தமிழ் வளர்ச்சி இயக்ககம் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை – 8.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை –9/18.

<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச்செயலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு /உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.
08.01.2021

-19-

**அரசாணை (நிலை) எண்.7, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(தவ 1.2)த் துறை,**
**நாள் 08.01.2021–இன் இணைப்பு**

| தமிழ்ச் செம்மல் விருது – 2020 | | |
|---|---|---|
| வ.எண் | விருதாளர்கள் | மாவட்டம் |
| 1. | திரு. ஜெ.வா. கருப்புசாமி | சென்னை |
| 2. | திரு. வேணு புருஷோத்தமன் | திருவள்ளூர் |
| 3. | முனைவர் சு. சதாசிவம் | காஞ்சிபுரம் |
| 4. | மருத்துவர் சே. அக்பர் கவுஸர் | வேலூர் |
| 5. | திரு. மா. முருககுமரன் | கிருட்டினகிரி |
| 6. | முனைவர் இரா. வெங்கடேசன் | திருவண்ணாமலை |
| 7. | பரிக்கல் ந. சந்திரன் | விழுப்புரம் |
| 8. | முனைவர் ஜா. இராஜா | கடலூர் |
| 9. | முனைவர் அ. செந்தில்குமார் (எ) தமிழ்க்குமரன் | பெரம்பலூர் |
| 10. | முனைவர் சா. சிற்றரசு | அரியலூர் |
| 11. | கவிஞர் பொன். சந்திரன் | சேலம் |
| 12. | பாவலர் பெரு. முல்லையரசு | தருமபுரி |
| 13. | திரு. ப. முத்துசாமி | நாமக்கல் |
| 14. | முனைவர் கா. செங்கோட்டையன் | ஈரோடு |
| 15. | திருமதி சி. கார்த்திகா | கரூர் |
| 16. | திரு. எம்.ஜி. அன்வர் பாட்சா | கோயம்புத்தூர் |
| 17. | முனைவர் துரை அங்குசாமி | திருப்பூர் |
| 18. | திரு. ம. பிரபு | நீலகிரி |
| 19. | திரு. சோம வீரப்பன் | திருச்சிராப்பள்ளி |
| 20. | திரு. ஜீவி (ஜீ. வெங்கட்ராமன்) | புதுக்கோட்டை |
| 21. | திரு. இரா. சேதுராமன் | சிவகங்கை |
| 22. | திரு. பழ. மாறவர்மன் | தஞ்சாவூர் |
| 23. | திரு. இராம. வேல்முருகன் | திருவாரூர் |
| 24. | திரு. மா. கோபால்சாமி | நாகப்பட்டினம் |

-20-



| | | |
|---|---|---|
| 25. | திரு. ஆ. முனியராஜ் | இராமநாதபுரம் |
| 26. | முனைவர் போ. சத்தியமூர்த்தி | மதுரை |
| 27. | திரு. தா. தியாகராசன் | திண்டுக்கல் |
| 28. | திரு. த. கருணைச்சாமி | தேனி |
| 29. | கவிஞர் சுரா (எ) சு. இராமச்சந்திரன் | விருதுநகர் |
| 30. | திரு. வீ. செந்தில் நாயகம் | திருநெல்வேலி |
| 31. | திரு. ச. காமராசு (முத்தாலங்குறிச்சி காமராசு) | தூத்துக்குடி |
| 32. | திரு. பா. இலாசர் (முளங்குழி பா. இலாசர்) | கன்னியாகுமரி |
| 33. | முனைவர் ச. சரவணன் | திருப்பத்தூர் |
| 34. | நந்திவரம் பா.சம்பத் குமார் | செங்கல்பட்டு |
| 35. | கவிஞர் பனப்பாக்கம் கே. சுகுமார் | இராணிப்பேட்டை |
| 36. | திரு. மு. நாராயணன் | தென்காசி |
| 37. | திரு. சி. உதியன் | கள்ளக்குறிச்சி |
| 38. | திரு. துரை குணசேகரன் | மயிலாடுதுறை |

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்
08.01.2021

8/1/2021